**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-2 | Date | : 13.03.2025 |
| Case No. | : **O.S.** 1/2023 | Nationality | : Indian |
| Name | : கந்தசாமி | Religion | : |
| Father's/Husband's Name | : தண்டபாணி | Age | : 68 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>பி.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திருபுவனம் கம்பகரேஸ்வரர் சுவாமி திருகோவிலில் கண்காணிப்பாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க கோவிலின் கிராம ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது . அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்து வந்ததால் கோவிலின் கண்காணிப்பாளர் என்ற முறையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்கள் கோவில் தர்மபுரம் ஆதினத்திற்கு சொந்தமானது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பி .சா.ஆ. 4 மனை வாடகை ரசீது எங்கள் கோவிலால் வழங்கப்பட்டது தான் . அந்த ரசீது பிரேமா, நாகராஜன் ஆகியோருக்கு 4275 சதுரடி விஸ்தீரணம் உள்ள மனைக்கு வழங்கப்பட்டுள்ளது . மேற்படி 4275 சதுரடி விஸ்தீரணம் உள்ள சொத்து கோவிலின் கிராம ஆய்வாளரால் அளவீடு செய்து வழங்கப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பி .சா.ஆ. 1 மறுப்பில்லா சான்றுகள் எங்கள் கோவிலால் 4275 சதுரடி விஸ்தீரணத்திற்கு வழங்கப்பட்டது தான் . மேற்படி 4275 சதுரடி அளவுள்ள சொத்து தற்போது பிரேமா , நாகராஜன் ஆகியோரின் அனுபவத்தில் உள்ளது. பி.சா. ஆ. 1 மற்றும் பி.சா.ஆ. 4 ல் புல எண் 647/*20 என சர்வே எண்

குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கின் வாதிகள் ராமமூர்த்தி , கிருஷ்ணன், பாஸ்கர், ஜெய்குமரன் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.17 18:49:25 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.